

# கழுகின் சத்தம்

## ஏப்ரல் 9, 2025

1

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து



நான், “டாக்டர்,
அழிவையும்
அழியாமையும்
பிரிக்கும் அந்த
கோட்டிற்கு அப்பால்,
அவ்விதம் சேவை
புரிந்த
மருத்துவர்களுகென
தேவன் ஒரு இடத்தை
வைத்துள்ளார் என்று
உங்களுக்கு
தெரியுமா?” என்று
கேட்டேன்.

*Title:* 60-05-15E **புத்திரசுவிகாரம் #1**

20. இங்கு அழகான அநேக தாய்மார்கள் அமர்ந்துள்ளனர். அவர் களில் சிலருக்கு அறுபது, எழுபது வயது ஆகிவிட்டது.

அவர்கள், “சகோ. பிரன்ஹாமே, நாங்கள் என்னத்தை சாதித்து விட் டோம்?” என்று கேட்கலாம். நீங்கள் உங்கள் பிள்ளைகளை வளர்த்தீர்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டு மென்று குறிக்கப்பட்டிருந்ததோ, அதை செய்தீர்கள்.

21. வயதான தகப்பன்மார்கள் சிலர், “நாங்கள் நிலத்தை உழுது பண்படுத்தினோம். நாங்கள் அதை யெல்லாம் செய்தோம். ஆனால், நாங்கள் பிரசங்கம் செய்யவில்லை,” எனலாம். தேவன் உங்களை எதற் காக அனுப்பினாரோ, அதை பிழை யின்றி செய்தீர்கள். எனவே, உங்க ளுக்கு பரலோகத்தில் ஒரு இடம் உண்டாயிருக்கும்.

22. நேற்று ஒரு வயோதிப மருத்துவ நண்பருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அவருக்கு எண்பது வயது நிரம்பிவிட்டது. அவருடைய மைத்துனி இன்றிரவு

சபைக்கு வந்திருக்கிறாள். அவரைக் குறித்து அவள் சற்று கவலை கொண்டிருந்தாள். எனவே, அவ ரைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

நான் அவருடன் உரையாடிக் கொண்டிருந்த போது அவருடைய முகம் பிரகாசமுற்றது. அநேக ஆண்டுகளுக்கு முன்பு கொலரா டோவில் அவர் வேட்டையாடின் சம்பவம் ஒன்றை என்னிடம் கூறிக் கொண்டிருந்தார். அங்கு தான் நானும் வேட்டைக்குச் செல்கிறேன். அவருடைய முகம் மிகவும் பிரகா சிக்க தொடங்கினது.

நான் அவரிடம், ''எவ்வளவு காலமாக நீங்கள் மருத்துவத் துறை யில் இருக்கிறீர்கள்?'' என்று கேட் டேன்.

23. “நீ பால் குடிக்கும் குழந்தை யாயிருந்த முதற்கொண்டே” என்று அவர் பதிலளித்தார்.

மேலும் அவர், “அநேகமுறை நான் என் குதிரையில் சேணம் கட்டி, சிகிச்சைக்கு வேண்டியவைகளை தோள்பையில் எடுத்துக் கொண்டு, அதை தொங்கவிட்டுக் கொண்டு சென்றதுண்டு. அநேகமுறை நான் நடந்தும் கூட சென்றதுண்டு” என் றார்.

24. நான், “ஆம், நீரோடைகளின் கரைகளில், அதிகாலையில் இரண்டு மணிக்கு, கையில் டார்ச் விளக்கைப் பிடித்து கொண்டு சென்று வயிற்று வலியால் அவதியுற்ற ஒரு சிறு குழந்தைக்கோ அல்லது பிரசவ வேதனை கொண்டிருந்த ஒரு பெண் ணுக்கோ அவர்கள் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து வைத்தியம் பார்த் திருப்பீரே” என்றேன்.

“அது உண்மை” என்றார் அவர்.

25. நான், “டாக்டர், அழிவையும் அழியாமையும் பிரிக்கும் அந்த கோட்டிற்கு அப்பால், அவ்விதம் சேவை புரிந்த மருத்துவர்களுகென

தேவன் ஒரு இடத்தை வைத்துள்ளார் என்று உங்களுக்கு தெரியுமா?" என்று கேட்டேன்.

26. அவருடைய கண்களில் கண்ணீர் மல்கியது. அவர் அழத் தொடங்கினார். அவர், தமது பலவீனமான கரங்களை நீட்டி என்னைப் பிடித்துகொண்டு, "அப்படி இருக்கலாம் என்று நம்புகிறேன்" என்றார். இந்த தேசத்திற்கு அப்பால், தேவன் ஒரு மனிதனின் ஆத்துமாவின் தன்மையை ஆராய்ந்தறிகிறார்.

27. பின்பு நான் அவருக்கு இந்த திருப்தியளிக்கும் வேதவாக்கியம் ஒன்றை கூறினேன்.

அநேகமுறை சேறு நிறைந்த வயல்களின் வழியாக இரவில் நடந்து சென்று, யாருக்காகிலும் ஒரு வருக்கு உதவி செய்ய முயன்று, அதற்காக காசு வாங்காமல் அவர் இருந்திருக்கக்கூடும். பரவாயில்லை.

நான் அவரிடம், "'இரக்கமுள்ள வர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்' என்று இயேசு வேதத்தில் கூறியுள்ளார்" என்று சொன்னேன். அது உண்மை.




நிறைய நேரம் எடுத்து, வார்த்தையை
வாசிக்கும்படியாக மற்ற காரியங்களை நிறுத்தி
ஒரு பக்கமாக ஒதுக்கிவைத்து விடுங்கள்.

*Title:* 58-03-28 தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறார்

25. பரிசுத்த ஆவியானவர் வார்த்தையைக்கொண்டு போஷிப்பிக்கிறார் என்று உங்களுக்குத் தெரியும்.

“மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

அதுதான் இன்றைக்குள்ள காரியமாகும், அந்தக் காரியங்களில் ஒன்று அதுதான், அதுதான் இன்று சபையை அதன் இரத்த சோகையான நிலையில் ஆக்குகிறது, அதற்குக் காரணம் என்னவென்றால், சபையானது வார்த்தையைக் கொண்டு போஷிக்க நேரம் எடுப்பதில்லை. (எனவே) சபையானது பசியாயிருக்கிறது.

26. நான் ஒரு மருத்துவராக இருந்து, மகத்தான பெரிய கட்டுடல் வாய்ந்தவனாகத் தோற்றமளிக்கும் ஒரு மனிதன் என்னிடம் வந்து,

“ஐயா, நான் வியாதியாயிருக்கிறேன்” என்று கூறினால்.

27. நான், “உங்களுக்கு என்ன அறிகுறிகள் உள்ளன?” என்று கேட்கிறேன்.

28. அவனோ, “நான் மிகவும் பலவீனமாயிருக்கிறேன், என்னுடைய கைகளை மேலே தூக்குவதே கஷ்டமாக உள்ளது” என்று கூறுகிறார்.

29. நல்லது, நான்... என்று கூறியிருப்பேன், ஒருசில சரீர சம்பந்த

மான நிலைமைகளைக் குறித்து அவனிடம் கேட்டிருப்பேன்.

30. “ஆமாம், அதெல்லாம் சரி யாகவே உள்ளது.”

31. அதற்கு நான், “நல்லது, ஐயா, நீர் ஒழுங்காக சாப்பிட்டு வருகி றீரா?" என்று கேட்டிருப்பேன்.

32. ஓ. அவன், “நேற்றைக்கு முந்தின நாள், நான் மெல்லிய கரகரவென்றிருக்கும் பிஸ்கட்டில் பாதி சாப்பிட்டேன்” என்று சொல்லி யிருப்பான்.

33. நல்லது, நான், “நீர் வெறுமனே பசியாயிருக்கிறீர். உமக்கு சக்தி தேவைப்படுகிறது, நீர் சாப்பிடுவது அவசியமாயிருக்கிறது” என்று கூறியிருப்பேன்.

34. அதுதான் சபையோடுள்ள காரியமாகும். வெறுமனே ஒரு வேத வசனத்தை வாசிப்பது, ஞாயிற்றுக் கிழமை காலையில் ஒரு சிறு வசனத்தை வாசிப்பது.

நாம் பிழைக்க வேண்டுமானால், நாம் ஒவ்வொரு நிமிடமும் அவ

ருடைய வார்த்தையில் முதலிடத்தைக் கொண்டிருக்க வேண்டும்!

நிறைய நேரம் எடுத்து, வார்த்தையை வாசிக்கும்படியாக மற்ற காரியங்களை நிறுத்தி ஒரு பக்கமாக ஒதுக்கிவைத்து விடுங்கள்.

“மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.”

---

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை.)*




அவருடைய
முகத்தோற்றத்தின்
தன்மையை ஒரு
ஓவியனும் தத்ரூபமாக
சித்தரிக்கவே
முடியாது.

*Title:* 65-02-18 வித்து பதருடன் சுதந்தரவாளியாயிருப்பதில்லை

12. இன்றிரவு நாம் கூடியுள்ள இந்த ஸ்தலம் எனக்கு முக்கியம் வாய்ந்தது. ஒரு அரங்கத்தை இங்கு கட்டப்போகிறார்கள் என்று கேள் விப்பட்ட முதற்கே, இங்கு ஒரு ஆராதனையை நடத்தவேண்டு மென்ற விருப்பம் எழுந்தது. பள்ளியின் நிர்வாகக் குழுவுக்கும், இங்கு நம்மை அனுமதித்த மற்ற வர்க்கும் என் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன். இந்த கட்டி

டம் நிற்கும் ஸ்தலத்தில் முப்பது ஆண்டுகட்கு முன்னர் ஓர் மகத்தான சம்பவம் நிகழ்ந்தது. அச்சமயம் இது துடைப்பம்புற்கள் வளர்ந்திருந்த ஒரு புதர்வயலாக இருந்தது. நான் 200 கெஜம் தூரத்தில் ஒரு சிறு வீட்டில் வசித்து வந்தேன். என் பெற்றோரின் இரட்சிப்புக்காக நான் அப்பொழுது மிகவும் கவலை கொண்டிருந்தேன். அவர்கள் இருவரும் இப்பொழுது பரம வீட்டில் இருக்கின்றனர். அந்நாட்களில் என் தகப்பனாரைக் குறித்து பிரத்தியேகமாக கவலை கொண்டிருந்தேன். நான் திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்தது எனக்கு நினை

விருக்கிறது. அது வெப்பமாகவும் கோடை காலமாகவும் இருந்தது.

13. இது *இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்* என்ற சிறு புத்தகத்திலோ, அல்லது *நான் அந்தப் பரம தரிசனத்திற்கு கீழ்ப்படியாதவனாய் இருக்கவில்லை* என்ற சிறு புத்தகத்திலோ எழுதப்பட்டுள்ளது என்று நம்புகிறேன்.

14. திடீரென்று நான் உறக்கத்தினின்று எழுந்தேன். என் தகப்பனைக் குறித்த பாரம் என் இருதயத்தில் எழுந்தது. இரவு ஆடையின் மேலேயே நான் கால் சட்டையைப்

போட்டுக் கொண்டு, இக்கட்டிடம் நிற்கும் புதர் வயலுக்கு வந்து சேர்ந்தேன்.

15. என் தகப்பனுக்காக அங்கு நான் முழங்காற்படியிட்டு, அவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்றும், அவரை நான் நேசிக்கிற காரணத்தால், அவரைப் பாவியாக மரிக்க விடக்கூடாது என்றும் தேவனிடம் மன்றாடினேன். ஜெபம் செய்தவாறு நான் எழுந்து கிழக்கை நோக்கினேன். அப்பொழுது ஒரு தரிசனம் உண்டானது.

16. மாயையான தோற்றத்தை (hallucination) நான் நம்புவதில்லை. ஆனால் தரிசனம் என்பது உண்மை யானது. அங்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நின்று கொண்டிருந்தார். தரிசனங்களில் அவரைக் காண்பது அதுவே முதல் தடவையாகும். என் தலைக்கு மேல் பத்து அடி உயரத் தில் அவர் நின்று கொண்டிருந்தார். அவர் வெள்ளை அங்கி அணிந் திருந்தார். அதன் ஓரங்களில் சுருக் கம் (fringe) வைக்கப்பட்டிருந்தது. அவர் தலைமயிர் தோள்வரை வளர்ந்திருந்தது. வேதம் அவரை விவரிப்பது போன்றே அவர் காணப்பட்டார் --- முப்பது வயது

தோற்றமுடையவராய், சிறிய உருவம் படைத்தவராய், மெலிந்து காணப்பட்டார். அவருடைய எடை 130 பவுண்டுக்கு அதிகமாய் இருக்க முடியாது.

17. அவரை நான் கண்ட போது, ஏதோ ஒன்றை காண்கிறேன் என் பதை மாத்திரம் அறிந்து கொண் டேன். அது ஒருக்கால் தவறா யிருக்குமோ என்று எண்ணினவ னாய், கண்களை பிசைந்து மறுபடி யும் பார்த்தேன். அவர் சற்று பக்க வாட்டில் நின்று கொண்டிருந்தார். அவர் முகத்தின் சாயல் (profile) மாத்திரமே தென்பட்டது. அவர்

முகத்தோற்றம் - நான் அடிக்கடி அதை தரிசனங்களில் கண்டிருக்கிறேன் --- ஹாஃப்மான் என்பவர் வரைந்துள்ள "முப்பத்து மூன்று வயதில் கிறிஸ்துவின் முகச்சாயல்" என்னும் படத்தில் இருப்பது போன்றே காணப்பட்டது. எனவே தான் நான் அந்த படத்தை என் வீட்டில் தொங்க விட்டிருக்கிறேன். நான் படிக்கும் புத்தங்களிலும், கூடுமான இடங்களிலெல்லாம் அதை வைத்திருக்கிறேன். ஏனெனில் அது போன்று தான் அவர் காணப்பட்டார். அவர் சிறிய உருவம் படைத்தவராய் எனக்குத் தோன்றினது.

18. அவரை நான் கண்டபோது, என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. "என் ஆண்டவர் நின்று கொண்டிருப்பதை உண்மை யாகவே நான் காண்கிறேனா?” என்று வியந்தேன். பீடம் தற்பொ ழுது இருக்கும் இடத்திலிருந்து சுமார் நாற்பது அல்லது ஐம்பது கெஜம் ஆரத்தில் (radius) நான் நின்று கொண்டிருந்தேன்.

19. நான் நிமிர்ந்து பார்த்தபோது, அவர் அங்கு நின்று கொண்டிருப் பதைக் கண்டேன். நான் விழித்துக் கொண்டிருக்கின்றேனா என்பதை உறுதிப்படுத்த என் விரலைக் கடித்

துப் பார்த்துக் கொண்டேன். என்னால் அதை நம்பவே முடியவில்லை. நான் கர்த்தருக்குள் வந்து அப்பொழுது சிறிது காலம் தான் ஆகியிருந்தது. நான் பிரசங்கம் செய்யத் தொடங்கி, அப்பொழுது ஆறு மாதங்களே கழிந்திருந்தன. நான் துடைப்பம் புல் ஒன்றைப் பறித்து, அதில் ஒரு சிறு துண்டை உடைத்தேன். நாட்டுப் புறங்களில் உள்ளவர், துடைப்பப் புல்லில் பல்குத்தி இருக்கின்றது என்பதை அறிவார்கள். அதை வாயில் போட்டு மெல்லத் தொடங்கினேன். “இது உண்மையாக இருக்க முடியாது. நான் சொப்பனம் காண்

கிறேன் என்று நினைக்கிறேன்" என்று எண்ணினேன்.

20. நான் தரையை உதைத்து, தலையை அசைத்து, கையைப் பிழிந்து கொண்டு, மறுபடியும் நிமிர்ந்து பார்த்தேன். அவர் உண்மையாகவே அங்கு நின்று கொண்டிருந்தார். அப்பொழுது காற்று வீசத் தொடங்கினது. துடைப் பம் புற்களும் காற்றில் அசையத் தொடங்கின. வரிசையாக உலர வைத்த துணிகள் காற்றில் எவ்விதம் அசையுமோ, அதுபோன்று அவரு டைய அங்கியும் காற்றில் அசைந் தது.

21. "அவருடைய முகத்தை நன் றாகக் கண்டால் எவ்வளவு நலமா யிருக்கும்!'' என்று எண்ணினேன். அவரோ கிழக்கை நோக்கியவராய், எதையோ கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். அவருடைய முகத்தை அருகில் காணவேண்டு மென்று அவரை அணுகினேன். ஆனால், அவரை சரிவர காண இயலவில்லை. அவருடைய கை களை அவர் முன்னால் வைத்துக் கொண்டிருந்தார். நான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து அவ ரைக் காணக் கூடாதவாறு அவர் மறைக்கப்பட்டிருந்தார்.

22. அவ்விடத்திலிருந்து நான் சற்று நகர்ந்து, அவருடைய கவனத்தைக் கவர எண்ணி, கனைத்துப் பார்த்தேன். அவரோ அசைய வில்லை.

23. அவரை அழைத்துப் பார்க்கலாமே என்று கருதி, “இயேசுவே” என்றேன். அவர் தலையைத் திருப்பி கரங்களை விரித்தவராய், என்னைத் திரும்பிப் பார்த்தார். அவ்வளவு தான் எனக்குத் தெரியும். விடியற் காலை வரை என்ன நேர்ந்ததென்று எனக்கு ஞாபகமில்லை. வயலில் ஏறக்குறைய இந்த இடத்தில் தான் நான் படுத்துக் கொண்டிருந்தேன்.

நான் இரவு முழுவதும் கண்ணீர் சிந்தினதால், என் இரவு ஆடை நனைந்து காணப்பட்டது. நான் எழுந்து சென்று விட்டேன். அவ ருடைய முகத்தோற்றத்தின் தன் மையை ஒரு ஓவியனும் தத்ரூபமாக சித்தரிக்கவே முடியாது. காண்பதற்கு அவர் சாதாரண மனிதனைப் போலவே இருந்தார். அவரைக் காணும்போது, அனுதாபத்தோடும், மரியாதையோடும், பயபக்தியோ டும் அழவேண்டுமென்று தோன்றும். ஆனால் அவர் பேசத் தொடங்கி னால், முழு உலகத்தையும் அசைக் கும் அளவிற்கு அதில் போதிய வல்லமையுண்டு, அத்தகைய தன்

மையை எந்த ஒரு ஓவியனும் தத்ரூபமாக வரையவே முடியாது.

24. எதற்காக அந்த காட்சியைக் கண்டேன் என்று இன்றுவரை எனக்குப் புலனாகவில்லை. ஆனால் முப்பது ஆண்டுகள் கழிந்த பின்பு, சர்வவல்லமையுள்ள தேவனை ஆராதிப்பதற்கென, அதே இடத்தில் கட்டப்பட்டு, அவருக்காக பிர திஷ்டை செய்யப்பட்டிருக்கும் அரங் கத்தில் இன்று நான் நின்று கொண்டிருக்கிறேன். அவரை நான் கண்ட சமயத்தில், நான் பாப்டிஸ்டு சபையின் ஒரு மூப்பனாக இருந் தேன். ஆனால் இன்று அதே

இடத்தில், இந்த அரங்கம் நிரம்பி வழியும் கூட்டத்திற்கு முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் கிரயமாக செலுத்தப்பட்டதன் விளைவாக பெற்றுக் கொண்ட இரட்சிப்புடன், இன்றிரவு உங்கள் முன்னிலையில் நான் நிற்கிறேன்.



அங்கே பார்த்தால் அங்கிருந்த கன்றுக்குட்டி நல்ல புஷ்டியாகவும் செழிப்பாகவும் இருந்தது. அது உற்சாகமாக சத்தமிட்டுக்கொண்டிருந்தது. அது குளிர்காலம் முழுவதுமாக நன்றாக தீவனமிடப்பட்டிருந்தபடியால் சந்தோஷமாக இருந்தது.



Title: 54-03-30 மீட்பில் இருக்கும் முழுமையான மகிழ்ச்சி

89. எனக்கு இப்பொழுது ஒரு கதை நினைவிற்கு வருகிறது.

ஒரு மனிதனிடம் அருமையான பெரிய பண்ணை ஒன்று இருந்தது. அதில் பெரிய பெரிய களஞ்சியங்களைக் கட்டினான். அது பார்ப்பதற்கு மிகவும் அருமையானதாகவும் மேன்மையானதாகவும் இருந்

தது. ஆனால் அந்த விவசாயியாகிய மனிதனோ மிகவும் சோம்பேரி.

சரி, இப்பொழுது அவனது பக்கத்து நிலத்தில் மற்றோரு விவசாயி தங்கியிருந்தான். இவனிடமிருந்த மாதிரி அவனிடம் சிறந்த களஞ்சியங்களெல்லாம் இல்லாமிலிருந்தாலும் அவன் நேர்த்தியாக விவசாயம் செய்து அந்த வருடம் தன்னுடைய களஞ்சியத்தில் அருமையான ஆகாரத்தை சேர்த்து வைத்திருந்தான்.

இப்பொழுது இரண்டு பண்ணையிலும் ஒவ்வொரு கன்றுக்குட்டி பிறந்தது.

வசந்தக்காலம் வந்தபொழுது இரண்டு கன்றுக்குட்டிகளையும் தொழுவத்திலிருந்து வெளியே விட்டார்கள்.

90. இந்த பக்கம் இருந்த குட்டி நன்றாக தீவனமிடப்பட்டிருந்தது.

காற்று அதன் மேலே வீசின உடனே அது தன்னால் முடிந்த மட்டும் வேகமாக ஓடி தன் பின்னங்

கால்களை உதைத்தபடி துள்ளித் துள்ளி, உற்சாகமாக சத்தமிட்ட படியே ஓடிக்கொண்டேயிருந்தது.

91. இந்த விவசாயியும் தன் னுடைய கன்றுக்குட்டியை வெளியே விட்டான். அவனுக்கு விவசாயம் செய்யவும் சோம்பேரித்தனம், அதை போஷிக்கவும் சோம்பேரித்தனம். ஆகையால் அதற்கு வெறும் களை களை மட்டும் கொடுத்திருந்தான்.

92. அதைப்பார்க்கும் போது எனக்கு சில போதகர்கள் ஞாப கத்திற்கு வருகிறார்கள். அது சரி

தான். மிகவும் சோம்பேரிகள் அங் கிருப்பதெல்லாம் வெறும் அற்புத மான களஞ்சியங்கள் மட்டும் தான். ஆனால் அவை மிகவும் அற்பமா யிருக்கிறது. அதில் கொஞ்சம் உண வையாவது கன்றுக்குட்டிகளுக்காக வையுங்கள். அது சரியே!

பரிசுத்த ஆவியைப் பற்றி வல்லமையாக பிரசங்கிக்கும் போது அது அவர்களை சுட்டெரிக்கதான் செய்யும். அது உண்மை. ஆனால் அந்த பண்டைய கால சுவிசேஷ முறைமையின்படியான சுட்டெ ரிப்பே சபைக்கும் அதன் அங்கத்

தினர்களுக்கும் அவசியமாயிருக் கிறது. கவனியுங்கள்.

93. இந்த சிறிய கன்றுக்குட்டி மிகவும் பரிதாபமாக இருந்தது. அது அந்த தொழுவத்திலிருந்து வந்த போது அதனால் நிற்க கூட முடியவில்லை. சற்று வேலியில் உள்ள இடைவெளியின் மூலமாக பக்கத்து பண்ணையை எட்டி பார்த் தது.

94. அங்கே பார்த்தால் அங்கி ருந்த கன்றுக்குட்டி நல்ல புஷ்டி யாகவும் செழிப்பாகவும் இருந்தது.

அது உற்சாகமாக சத்தமிட்டுக் கொண்டிருந்தது. அது குளிர்காலம் முழுவதுமாக நன்றாக தீவனமிடப் பட்டிருந்தபடியால் சந்தோஷமாக இருந்தது.

95. பட்டினியால் வாடியிருந்த இந்த கன்றுக்குட்டியோ அந்த கன்றுக்குட்டியை பார்த்து, “அப்பா, என்ன ஒரு மதவெறி” என்றது. நிச்சயமாகவே வாடி மெலிந்து போன நிலமையிலிருந்த அந்த கன்றுக்குட்டிக்கு வேறு எதுவும் சிந்திக்க முடியவில்லை.

96. ஆனாலும் நான் உங்களுக்கு சொல்லட்டும், குளிர்காலம் முழு வதும் நன்றாக சாப்பிட்டு கொழுத் திருந்த அந்த கன்றுக்குட்டிக்கு தான் எங்கிருக்கிறோம் என்பதை நன்றாக அறிந்திருந்தது. அந்த இதமான காற்று அதன் மீது வீசினவுடனேயே அது மிகவும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தது.

97. தேவனுடைய ஆவியினால் பிறந்த எந்த மனிதனையும் மத வெறியன் என்றும் மற்ற பெயர்கள் கொண்டே அழைப்பார்கள். ஆனா லும் பெந்தெகொஸ்தே நாளில் நடந்

தது போல இதமாய் வசந்தக்கால காற்றாக பரிசுத்த ஆவியானவர் வீசும்போது ஏதோ ஒன்று நிச்சய மாகவே நடக்க போகிறது. சரியாக இப்பொழுதே அந்த இதமான காற்று வீசுகின்றது, நீங்களெல்லோரும் சுவி சேஷத்தினால் கொழுத்து செழிப் பாக மகிழ்ச்சியோடு இருக்கிறீர்கள். உங்கள் பின்னங்கால்களை உதைத்து துள்ளி சந்தோஷமாயிருங்கள்.





